செ.வெ.எண்: 446

# செய்திக் குறிப்பு

நாள். 13.07.2011

**திரைப்படம் சார்ந்த பயிற்சி முடித்தவர்களுக்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் சான்றிதழ்கள் வழங்கினார்.**

தாட்கோ மூலம் ஆதிதிராவிடர் பழங்குடியின மற்றும் மதம் மாறிய கிறித்துவ இளைஞர்களுக்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, JCB இயக்குபவர் பயிற்சி Diesel Mechanic, அழகுக்கலை, தையல்கலை, ஆயத்த ஆடை வடிவமைப்பு Plastic பொருட்கள் தயாரித்தல், காலணி மற்றும் தோல் பொருள் தயாரித்தல், திரைப்படம் சார்ந்த பயிற்சி , உணவு தயாரித்தல், சில்லறை விற்பனை மேலாண்மை உதவி செவிலியர், கணிணி சார்ந்த பயிற்சிகள், CADD CAM. Tally, Hard Ware & Net working, Multimedia & Animation போன்ற பயிற்சிகளும், மேலும் போட்டி தேர்வுகளுக்கான பயிற்சிகளான CAT, பட்டய கணக்கர், செலவு கணக்கர் படிப்பு மற்றும் வங்கி தேர்வு ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி போன்ற பலவித பயிற்சிகள் ஆண்டுக்கு சுமார் 22000 நபர்கள் பயன்பெறும் வகையில் நடத்தப்படுகிறது. இப்பயிற்சிகளுக்காக மாநில அரசு ரூ.25.00 கோடி நிதி வழங்குகிறது.

இப்பயிற்சியின் ஒரு பிரிவான திரைப்படம் சார்ந்த கீழ்கண்ட பயிற்சிகள் இந்திய அரசு நிறுவனமான தேசிய திரைப்பட வளர்ச்சி கழகத்தின் மூலம் நடத்தப்படுகிறது.

1, Avid – Digital Non linear Editing
2. FCP – Non Linear Editing
3. Cinematography in Video Camera
4. Multimedia
5. Audio Engineering
6. Digital Still Photography
7. Video Subtitling

திரைப்படம் சார்ந்த இப் பயிற்சிகள் மொத்தம் 220 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ இளைஞர்களுக்கு ரூ.17 இலட்சம் செலவில் வழங்கப்பட உள்ளது. முதல் தொகுதியில் இப்பயிற்சி முடித்துள்ள 43 நபர்களுக்கான பயிற்சி நிறைவு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 13.07.2011 அன்று மாலை 4.00 மணிக்கு தேசிய திரைப்பட வளர்ச்சி கழக வளாகத்தில் நடைபெற்றது. மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு.N.சுப்பிரமணியன் அவர்கள் பயிற்சி நிறைவு பெற்றவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். மேலும் பயிற்சி முடித்துள்ளவர்களிடம் பயிற்சியின் பயன்பாடு மற்றும் வேலைவாய்ப்பு குறித்து கேட்டறிந்தார். பயிற்சி நிலையத்தில் உள்ள அடிப்படை வசதிகள் மற்றும் பயிற்சிக்கான தளவாடங்கள், உபகரணங்கள் ஆகியவற்றை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். பயிற்சி முடித்தவர்களுக்கு உடனடி வேலை கிடைத்திட உதவி செய்யப்படும் என்று தேசிய திரைப்பட வளர்ச்சிக்கழக நிர்வாகிகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் நலத்துறை செயலர் திரு.ஆ.சு.ஜீவரத்தினம், இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு.சா.விஜயராஜ் குமார், இ.ஆ.ப., மற்றும் பயிற்சி நிறுவன அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9